**செய்தி வெளியீடு எண்: 03/10/2021** **நாள்: 02.10.2021**

**பத்திரிக்கைச் செய்தி**

**காந்தி ஜெயந்தியையொட்டி இன்று (02.10.2021) அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது**

"தேசத் தந்தை" மகாத்மா காந்திக்கு மரியாதை செலுத்தும் விதமாக மற்றும் இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டு விழாவை (Azadi ka Amrut Mahostav) முன்னிட்டு இன்று (02.10.2021) காந்தி ஜெயந்தியையொட்டி அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையத்தில் பின்வரும் பல்வேறு நிகழ்ச்சிகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் நடத்தியது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், ராஜலட்சுமி பொறியியல் கல்லூரி மாணவர்களுடன் இணைந்து பசுமை இந்தியா இயக்கம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த விதை பேனா மற்றும் மரக்கன்றுகளை மெட்ரோ பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கியது. இந்நிகழ்வின் போது, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களின் குழந்தைகள் மகாத்மா காந்தி மற்றும் இந்திய சுதந்திரம் பற்றிய கவிதை ஒப்பித்தல் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். ஓவியம் வரைதல், மெல்லிசை பாடல்கள் போன்ற நிகழ்ச்சிகள், சென்னை பெற்ற வல்லமை (Chennai Got Talent), 2021-இன் வெற்றியாளர்களால் நடத்தப்பட்டது. “ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை கலைக்குழுவினரின் மெல்லிசை கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது. மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளும் கொரோனா வைரஸ் நெறிமுறைகளைக் கடைப்பிடித்து தனிமனித இடைவெளியுடன் நடத்தப்பட்டது.

**இலவச பொது சுகாதார மருத்துவ முகாம்:**

இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டு விழாவின் (Azadi ka Amrut Mahostav) ஒரு பகுதியாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், ஃபோர்டிஸ் மருத்துவமனையுடன் (Fortis Hospital) இணைந்து மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக இலவச பொது சுகாதார மருத்துவ முகாம்களை 20.09.2021 முதல் மெட்ரோ இரயில் நிலையங்களில் நடத்தி வருகிறது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாம்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின்படி தொடர்ந்து நடத்தவிருக்கிறது.

| வ.எண் | தேதி | இடம் | நேரம் |
|---|---|---|---|
| 1 | 04.10.2021 (திங்கள்கிழமை) | திருவொற்றியூர் மெட்ரோ விமான நிலையம் மெட்ரோ | காலை 10 மணி முதல் மதியம் 12 |

| | | | |
|---|---|---|---|
| 2 | 06.10.2021<br>(புதன்கிழமை) | உயர் நீதிமன்றம் மெட்ரோ<br>திருமங்கலம் மெட்ரோ | மணி வரை<br>மற்றும்<br>மாலை 4 மணி<br>முதல் 6 மணி<br>வரை |
| 3 | 08.10.2021<br>(வெள்ளிகிழமை) | புது வண்ணாரப்பேட்டை மெட்ரோ<br>வடபழனி மெட்ரோ | |

இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாமில்;

1. பி.எம்.ஐ (உயரம் மற்றும் எடை)
2. இரத்த அழுத்தம்
3. சீரற்ற இரத்த சர்க்கரை
4. வெப்பநிலை
5. துடிப்பு போன்றவற்றிற்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றிற்கான ஆலோசனைகளும் வழங்கப்படும்.

கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மெட்ரோ இரயில் நிலையங்களில் நுழைவதற்கும் மெட்ரோ இரயில்களில் பயணிப்பதற்கும் அனைத்து பயணிகளும் கட்டாயம் சரியாக முகக்கவசம் அணிந்திருப்பதுடன் தனிமனித இடைவெளியைக் கடைபிடித்து பயணம் செய்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

***********************